O.S. No: 87/2015
பெயர்: ரவி
**பி.சா. 9**
13-03-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.39**

**குறுக்கு விசாரணை**

நான் கோவிந்தராஜீ 12ம் பிரதிவாதியிடம் நேர்முக உதவியாளராக 40 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். அவர் உயிருடன் இருக்கும் வரை நான் தான் அவருக்கு நேர்முக உதவியாளராக இருந்தேன். அவர் இறந்த பிறகு அவருடைய பையனிடம் நேர்முக உதவியாளராக பணியாற்றி வருகிறேன். அவருடைய மகனும் இந்த வழக்கில் தரப்பினர் தான் 18ம் பிரதிவாதி. கோவிந்தராஜீக்கு மனைவி, ஒரு மகன், மற்றும் மகள் வாரிசு. கோவிந்தராஜ் சொத்து வாங்கிய விவரங்கள் அனைத்தும் நேரடியாக எனக்கு தெரியும். நாகராஜிடம் கோவிந்தராஜ் சொத்து வாங்கிய போது நான் கூட போனேன் நான் அவரிடம் கிரயம் பேசவில்லை. கிரயம் வாங்குவதற்கு இரண்டு மாதங்கள் முன்பு நாகராஜ் படையாட்சியை போய் பார்த்தோம். 18ம் பிரதிவாதி எனக்கு அதிகார முகவர் பத்திரம் கொடுத்துள்ளார். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்காக கொடுத்துள்ளார். அந்த பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திலேயே 18ம் பிரதிவாதியன் அதிகாரம் பெற்ற முகவராக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். இந்த இடம் தற்போது தோட்டமாக உள்ளது. இந்த கிரயம் பேசும் போது என்னென்ன மூலப்பத்திரம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். பதிவான உயில் பத்திரம், மற்றும் இரண்டு பத்திரங்கள் ஆக மொத்தம் 3 பத்திரங்கள் கொடுத்தார். மற்ற இரண்டு பத்திரங்கள் என்ன என்று நினைவில்லை ஆனால் 3 பத்திரங்கள் கொடுத்தார். உயிலை நான் படித்துப்பார்த்தேன். நாகராஜ படையாட்சிக்கு அவரின் அப்பா நடேச படையாட்சி எழுதி வைத்திருந்தார். நடேச படையாட்சி தனக்கு அந்த சொத்து எவ்வாறு கிடைத்தது என்ற விவரம் எழுதி உள்ளார். நடேச படையாட்சிக்கு எத்தனை பையன்கள் என்று தெரியாது. நடேச படையாட்சிக்கு மூன்று மகன்கள் என்றால்

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/-J.Radhika,
Additional District Judge
Fast Track Court,
Kumbakonam.

தெரியாது. தாவா சர்வே நம்பர் 209/3 1சி மற்றும் 1சி2 என்றால் சரி. வாங்கிய சொத்தின் விஸ்தீரனம் 45,000 சதுர அடி கம்மி ஜாஸ்தியாக இருக்கும். 18ம் பிரதிவாதி கொடுத்த பவர் என்னிடம் உள்ளது. நாகராஜ படையாட்சிக்கு பாகம் மூலமாக கிடைத்த சொத்து என்றால் சரி. நடேச படையாட்சி வாங்கிய சொத்து என்றால் தெரியாது. நான் 12ம் பிரதிவாதி மற்றும் 18ம் பிரதிவாதியிடம் வேலை பார்ப்பதற்கு நியமன உத்தரவு எதுவும் இல்லை அதற்கான ஆவணங்கள் தாக்கல செய்யவில்லை என்றால் சரி. கிரயம் வாங்கிய தேதியில் பணம் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள் எவ்வளவு கொடுத்தார்கள் என்று தெரியாது. வழக்கறிஞரிடமிருந்து இந்த சொத்தை வாங்குவதற்கு முன்பு பெற்ற கருத்துரையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் 12, 18 பிரதிவாதியின் நேர்முக உதவியாளர் மற்றும்பவர் ஏஜென்ட் இல்லை என்றாலும் அவர்கள் கேட்டுக்கொண்தற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 11.52**

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/-J.Radhika,
Additional District Judge
Fast Track Court,
Kumbakonam.